**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு T. சோழவேந்தன்,** B.A.,B.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

2023–ம் ஆண்டு நவம்பர் மாதம் 8–ம் நாள் புதன்கிழமை

******

**இடைமனு எண்.3/2023–ல் அசல் வழக்கு எண். 56/2017**

ராஜேந்திரகுமார் ....மனுதாரர்/ சேர்க்கவேண்டிய தரப்பினர்

...எதிர்..

1. ஜெயபாரதி ...எதிர்மனுதாரர்/வாதி
2. வட்டாட்சியர், சீர்காழி
3. மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டினம் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 02.11.2023 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு R.சேயோன் அவர்களும், முதல் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு R.ஆத்மநாதன் அவர்களும், 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு S.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகி எதிர் வழக்குரை இல்லை என மேல் குறிப்பு செய்யப்பட்டும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க அனுமதி கோரி இம்மனு உ.வி.மு.ச.கட்டளை-1, விதி-10(2)-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கில் சேர்க்க வேண்டிய தரப்பினர் ஆவார். 1–ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு வழக்கு சொத்தில் அவரது தாயார் கலா என்பவர் 30.11.2011–ம் தேதியில் உயில் ஆவணத்தின் மூலம் வழக்கு சொத்துக்கள்

கிடைத்ததாக கூறி இந்நீதிமன்றத்தில் வழக்கு சொத்திற்கு 1–ம் எதிர்மனுதாரர்/வாதி உரிமையாளர் என்று விளம்பல் பரிகாரம் கோரியும், 2–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி வழக்கு சொத்திற்கு பட்டா வழங்க வேண்டும் என்று ஒரு செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1–ம் எதிர்மனுதாரர்/வாதியின் தாயாருக்கு ஐந்து நபர்கள் சட்டப்படியான வாரிசுதாரர்கள். 1. ராஜேந்திரகுமார், 2. மீரா, 3. சாந்தி, 4. மோகனகண்ணன், 5. ஜெயபாரதி ஆகிய ஐவரும் சட்டப்படியான வாரிசுகள். மேற்படி வழக்கில் வாதியைத் தவிர மற்ற இதர கலாவின் வாரிசுகள் சொத்தின் பட்டாவை, வாதி பெயருக்கு பட்டா மாற்றம் செய்வதில் ஆட்சேபணை இல்லை என்று 17.03.2016–ம் தேதியில் ஆட்சேபணையின்மை மற்றும் சம்மத பத்திரம் எழுதிக்கொடுத்ததாக கூறி கலாவின் மற்ற வாரிசுகளை சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 17.03.2016–ம் தேதியில் ஏற்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ள ஆட்சேபணையின்மை மற்றும் சம்மத பத்திரம் பொய்யானது. அப்படி ஒரு பத்திரம் இந்த மனுவின் மனுதாரரான ராஜேந்திரகுமார் எழுதிக்கொடுக்கவில்லை, மற்ற வாரிசுதாரர்களும் எழுதிக்கொடுத்ததாக தெரியவில்லை. 1–ம் எதிர்மனுதாரர்/வாதி தன் தாயார் கலா தனக்கு எழுதி வைத்ததாக சொல்லி உள்ள 30.11.2011 தேதியிட்ட உயில் ஆவணம் பொய்யானது மற்றும் போர்ஜரியாக தயாரிக்கப்பட்டது. கலாவின் மற்ற வாரிசுகளை இந்த வழக்கில் ஒரு தரப்பினாராக சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் இந்த வழக்கின் சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை அசல் வழக்கு எண்.160/2022–ஐ தொடர்ந்துள்ளார். மனுதாரர்/சேர்க்கப்பட வேண்டிய நபரை இந்த வழக்கின்ஒரு தரப்பினராக சேர்த்து வழக்கை மேல் நடத்தாவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். 1–ம் எதிர்மனுதாரர்/வாதி வழக்கு சொத்தைப் பொறுத்து வழக்கு தொடர்ந்துள்ள விபரம் தற்பொழுதுதான்

மனுதாரர்/சேர்க்க வேண்டிய தரப்பினருக்கு தெரியும். எனவே மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. <u>முதல் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.</u>**

இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் சரியல்ல. எதிர்மனுதாரர்/வாதி வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்படுகிறது. மனு குறுந்தலைப்பு, நெடுந்தலைப்பில் 3-ம் எதிர்மனுதாரர்/2-ம் பிரதிவாதி பெயர், முகவரி தவறு. 2-ம் பிரதிவாதி மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஆவார். வழக்கு சொத்துக்கள் வாதியின் தாயாரான கலா என்பவர் உயிருடன் இருந்தபொழுது 30.11.2011-ம் தேதியில் வாதி ஜெயபாரதிக்கு ஒரு உயில் ஆவணம் கலா என்பர் நல்ல நினைவுடனும், சுய சிந்தனையுடனும், பிறர் தூண்டுதல் ஏதுமின்றி எழுதி வைத்துள்ளார். வாதியின் தாயார் கலா என்பவர் 21.03.2012-ல் இறந்து விட்டார். வாதியின் தாயார் கலா இறந்தவுடன் மேற்படி உயில் ஆவணம் அமுலுக்கு வந்து தாவா சொத்துக்கள் வாதியின் உரிமையிலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது. வாதியை தவிர வாதியின் தாயார் கலாவின் சொத்துக்களுக்கு வேறு யாருக்கும் உரிமை இல்லை. தாவா சொத்துக்களுக்கு வாதி அரசாங்கதிற்கு கிஸ்தி செலுத்தி வருகிறார். தாவா சொத்துகளான கலா பெயரில் உள்ள பட்டாவை வாதி பெயருக்கு பட்டா மாற்றம் செய்து தர கலாவின் இதர வாரிசுதாரர்கள் 17.03.2016-ம் தேதியில் ஆட்சேபணையின்மை மற்றும் சம்மதப் பத்திரம் வாதிக்கு எழுதி கொடுத்துள்ளார்கள். அந்த ஆட்சேபணையின்மை மற்றும் சம்மத பத்திரம் ஆகியவற்றில் மனுதாரர் நோட்டரி பப்ளிக் முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார். அதனால் வாதிக்கு தாவா சொத்துக்களை பொறுத்து கலா 30.11.2011-ல் எழுதி வைத்த உயிர் ஆவணம் உண்மையானதாகும். மேற்படி ஆவணம் மற்றும் சம்மத பத்திரத்தை மனுதாரர் பொய்யானது என்று மனுவில்

குறிப்பிடப்பட்டுள்ளது சரியல்ல. மனுதாரர் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பது உண்மை. மேற்படி வழக்கின் பிராதில் கண்டுள்ள சங்கதிகளை வாதி மறுக்கிறார். தாக்கல் செய்யப்பட்டுள்ள பாகப்பிரிவினை வழக்கும் நிலை நிற்க தக்கதல்ல, பாகப்பிரிவினை வழக்கில் வாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய உள்ளார். தாவா சொத்துக்கள் வாதியின் உரிமையிலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது. தாவா சொத்துக்களில் வாதியை தவிர வேறு யாருக்கும் எவ்வித உரிமையும், அனுபவமும் இல்லை. தாவா சொத்துக்களை பொறுத்து வாதிக்கு கலா என்பர் 30.11.2011-ம் தேதியில் எழுதி வைத்த உயில் ஆவணம் உண்மையாது என்றும், வாதிக்கு 17.03.2016-ம் தேதியில் தாவா சொத்துக்களை பொறுத்த ஆட்சேபணையின்மை மற்றும் சம்மதப் பத்திரம் மனுதாரரும் கலாவின் மற்ற வாரிசுதாரர்களும் எழுதிக் கொடுத்துள்ளது உண்மையானது என்றும், இந்த வழக்கில் மனுதாரை தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியமில்லை. இந்த வழக்கிற்கு மனுதாரர் தேவைற்ற தரப்பினர் ஆவார். எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

3. மனுதாரர்/சேர்க்க வேண்டிய தரப்பினர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்/சேர்க்க வேண்டிய தரப்பினர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

5. இருதரப்பும் கேட்க்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது 1-ம் எதிர்மனுதார்/வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1-ம் எதிர்மனுதாரர்/வாதி கடந்த 30.11.2011-ம்

தேதியில் தனது தாயார் தாவா சொத்துகளை பொறுத்து உயில் ஆவணம் எழுதிவைத்துள்ளதாகவும், அதற்கு மேற்படி கலாவின் வாரிசுகளில் ஒருவரான மனுதாரரும் ஆட்சேபணை இல்லை ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளதாகவும், 1-ம் எதிர்மனுதாரரர்/ வாதி தரப்பில் மனுதாரரின் மனுவிற்கு எதிருரையின் மூலம் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/சேர்க்கப்படவேண்டிய நபர் 1-ம் எதிர்மனுதாரர்/வாதியின் சகோதரர் என்பதும், இறந்துபோன கலாவிற்கு இதர வாரிசுதாரர்கள் உள்ளார்கள் என்பதும் மனுதாரர்/சேர்க்ப்படவேண்டிய நபர் மற்றும் 1-ம் மனுதாரர்/வாதிக்கும் இடையே இதே வழக்கு சொத்தை பொறுத்து மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்பதும் இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மைகளாகும்.

6. 1-ம் எதிர்மனுதாரர்/வாதி வழக்கு சொத்தை விளம்புகை கோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் மனுதாரர்/சேர்க்கப்படவேண்டிய நபர் தாவா சொத்தில் பாகம் உள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில், 1-ம் எதிர்மனுதாரர்/வாதி அசல் வழக்கில் அவரது தாயார் கலா கடந்த 30.11.2011-ல் எழுதிக்கொடுத்ததாக சொல்லியுள்ள உயில் ஆவணம் குறித்தும் மனுதாரர்/சேர்க்கப்படவேண்டிய நபர் 17.03.2016-ல் எழுதிக்கொடுத்ததாக சொல்லியுள்ள ஆட்சேபணையின்மை பத்திரம் குறித்தும் வழக்கு விசாரணை மூலமே அதன் உண்மை தன்மை அறிந்து முடிவுக்கு வர இயலும். மேலும் மனுதாரர்/சேர்க்கப்படவேண்டிய நபரை தரப்பினராக சேர்க்கும் பட்சத்தில் 1-ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வித பாதிப்பும் வழக்கின் தன்மையும் மாறுபடுவதில்லை. மாறாக மனுதாரர்/சேர்க்கப்படவேண்டிய நபரின் கோரிக்கை நிராகரிக்கும் பட்சத்தில் ஒரே வழக்கு சொத்து குறித்து பல்வேறு வழக்கு நடவடிக்கைகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

7. அசல் வழக்கில் வா.சா.1–ஐ குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றமாக இருப்பதாலும், தரப்பினர் மற்றும் வழக்கு சொத்திற்கு இடையேயான அனைத்து பிரச்சனைகளையும் தீர்ப்பதின்மூலம் தரப்பினர்களுக்கிடையே எழும் பல்வேறு

வழக்கு நடவடிக்கைகளை (Multiplicity proceedings) தவிர்க்க இயலும். மேலும் இம்மனுவினை அனுமதிப்பதால் வழக்கின் தன்மையும், ஏற்கனவே பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்குமூலங்களும் எவ்வித மாற்றமும் ஏற்படபோவதில்லை என்று கருதி மனுதாரர்/சேரக்கப்படவேண்டிய நபர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்றும், மனுவின் தன்மை கருதி தரப்பினர்கள் அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து அவ்வாறே இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்ப்படுகிறது.

முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் 08-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/– T. சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |

(ஒம்/– T. சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.3/2023–ல்
அசல் வழக்கு எண்.56/2017
நாள்.08.11.2023.